பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் லைசென்ஸ்.

*குறுகியகால வினா எண். 7—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதனீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர் களுக்கு லைசென்ஸ் வழங்கியது மதுவிலக்கைத் தீவிரப்படுத்தும் காலங்களில் இருந்து வந்தது. இப்பொழுது மது விலக்கு தளர்த்தப்பட்டதால் உடனடியாக லைசென்ஸ் வழங்கும் முறையை அரசு ரத்து செய்யுமா.

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) மற்றும் (ஆ): லைசென்ஸ் வழங்கும் முறையை ரத்து செய்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறை எப்போது ரத்து செய்யப்படும்? அதனால் அந்தத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பாதிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. எவ்வளவு காலம் பிடிக் கும் என்பதை இப்போதைக்கு சொல்லமுடியாது. ரத்து செய்வ தால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்காது. அதற்கு மாறாக வேலைவாய்ப்பு அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர் களுக்கு லைசென்ஸ் ரத்து செய்வதால் ஜனதா இன்சூரன்ஸ் பாலிசி மூலமாக பெறப்படுகின்ற சலுகையும், தவறி விழுந்து இறந்துவிட்டால் அரசு கொடுக்கும் 10,000 ரூபாய் சலுகையும் பாதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக பாதிக்காது.

1983 பிப்ரவரி 12]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர்களுக்கு அனுமதி வழங்குகின்றபோதே ஆபத்து வேலையில் ஈடுபடுகின்ற காரணத்தால் அவர்கள் இந்த ஜனதா இன்சூரன்ஸில் சேர்ந்தால் தான் முன்னிரிமை வழங்குவதற்கு அரசு ஏதாவது சட்டம் இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்சூரன்ஸ் பாலிஸி என்பது கட்டாயப்படுத்துவது அல்ல. தொழிலாளர்கள் அதை உணர்ந்து அதை நிறைவேற்றுவார்களானால் அதனால் அவர்களுக்கு நலனும் பலனும் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து இந்த ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேர்ந்தால் அதனால் அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். தொழிலாளர்கள் ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேருவதற்கு வருடம் 12 ரூபாய் அதாவது மாதம் 1 ரூபாய் கட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை அவர்கள் பெற்று ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான கவனத்திற்காக இதனை வைக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் தேதி அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசினார்கள். அது சமயம் ஒரு வாரத்திலே நான் சொல்கிறேன் என்று சொன்னார்கள் * * அவர்களைக் கலந்துகொண்டுதான் கால் அட்டென்ஷன் கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்கு அதை அனுப்பியிருக்கிறேன். வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கரும்புக்கான விலை சம்பந்தமாக முத்தரப்பு மாநாடு ஒன்றை அமைச்சர் அவர்கள் கூட்டி நாங்கள் எல்லாம் போய் அங்கே பெரிய விவாதம் நடந்தது. சீக்கிரமாக அறிவிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அறிவிக்கவில்லை. 120 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். 175 ரூபாய்.........

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.